நம்மை சீர்படுத்த மனதில் நல்லெண்ணங்களை ஓடவிட்டுக் கொண்டிருக்க வேண்டும். மனதில் எழும் எண்ணங்களை ஆராய்ந்தால் புரியும் நம்மில் பலரும் எந்த அளவுக்குத் தாழ்ந்து இருக்கிறோம் என்று. நம்மைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைத்தது என்று கேட்டவுடனே நமது மகனை விட அதிக மதிப்பெண்கள் பெற்று விட்டானே என்ற எண்ணத்தில் மனம் சுருங்குகிறது. நமது உறவினரின் ´பையனுக்கு நல்ல வேலை கிடைத்து விட்டது என்ற செய்தியை கேட்டதும் உடனே பொறாமையும், மன உளைச்சலும் வருகிறது. இதன் அடிப்படைக் காரணம் அவர்கள் மனதை சீரமைக்க தவறியதே. ஒருவருக்கு அதிக மதிப்பெண் கிடைப்பதோ, அதிக வருமானம் கிடைப்பதோ, நல்லவேலை கிடைப்பதோ, அது அவரின் முயற்சியின் பலன். இதை உணராமல் மனம் வெதும்புவதால் என்ன பயன். இதுபோன்ற எதிர்மறை எண்ணங்களால் மனநலமும், உடல் நலமும் பாதிக்கும் என்பதை அவர் உணர்ந்து கொள்ளாததால் இது நிகழ்கிறது. நம்மிடம் இல்லாத ஒன்றுக்காக ஏக்கம் கொண்டு, அலைந்து திரிவதை விட்டு, தம்மிடம் இருப்பதை,அதுவும் பாடுபட்டு பெற்றதை நினைத்து பெருமைப்பட்டு மகிழ்ச்சி அடைவோம் என்ற எண்ணம் உருவாக வேண்டும். இதற்கு மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்தி, நம் வாழ்க்கை, நம் கையில் என்றும், வாழ்க்கை என்றால் ´பள்ளமும், மேடும் நிறைந்ததுதான் என்று தெளிவாக இருந்தால் அதுநிச்சயம் கைகூடும். எண்ணத்தின் உயர்வால் தனக்கும் உயர்வு, தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உயர்வு என்பதை உணர்ந்து எண்ணத்தை ஆராய்ந்து, சீரமைத்து தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கு ஆசையை முறைப்படுத்தி, சீரமைத்து, சினத்தை தவிர்த்து, கவலையை ஒழித்து, நான் யார் என்ற உண்மையை உணர்ந்து, எப்பொழுதும் ஒரு விழிப்பு நிலையிலேயே இருக்கப் பழகவேண்டும். இந்தப்பழக்கம் நிச்சயமாக வெற்றியைத் தரும்.

■■■

# OMR ல் விழுந்த இடி !!

**கொ**ரானா பாதிப்பில் சென்னை OMR IT COMPANY மற்றும் அதை நம்பியுள்ள தொழில்களும்: ஐடி துறையில் வொர்க் ஃப்ரம் ஹோம் நிறைய பிசினசுக்கு ஆப்பு வச்சுடுச்சுன்னு தான் சொல்லணும்..

இந்த ஐடி துறையை நம்பிதான் சென்னை ஓஎம்ஆர் சாலை முழுக்க வானுயர்ந்த கட்டிடங்கள் வணிக வளாகங்கள்ன்னு கடந்த 20 வருஷத்துல எக்கச்சக்கமா வளர்ந்துச்சு.

பலரது வியாபாரம் பெருகிச்சு. ஏராளமான அடுக்கு மாடிக்குடியிருப்புகள் உருவாச்சு. பல முன்னணி வர்த்த நிறுவனங்கள் குறிப்பாக ஆட்டோமொபைல் இன்ட்டஸ்ட்ரி, ஹோட்டல்கள், பிராண்டட் ரெடிமேட் ஷோரூம்ஸ், மொபைல் ஷோரூம்ஸ், சர்வீஸ் சென்டர்ஸ் எல்லாம் இவங்களை நம்பி கடைகளை விரிச்சாங்க.

இப்போ வொர்க் ஃப்ரம் ஹோம்ல செலவினங்கள் கணிசமா குறைஞ்சு போச்சு. கீ போஸ்ட்ல இருக்கறவங்க மத்தவங்களை மானிட்டர் பண்ண ஆயிரம் சதுர அடி அளவுல கட்டிடம் இருந்தா போதும்.. அதுவும் அந்த ஏரியாலதான் இருக்கனும்கிறதும் இல்லே..

இந்த வொர்க் ஃப்ரம் ஹோம்ல ஐடி நிறுவனங்களுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் வாடகை மிச்சம். கரன்ட் பில் மிச்சம். தண்ணீர், பேன்ட்ரி, ஹவுஸ் கீப்பிங், செக்யூரிட்டி இன்ன பிற செலவினங்கள்ன்னு எதுவும் இருக்காது. அதனால பல முன்னணி நிறுவனங்கள் சின்ன கட்டிடங்களுக்கு தங்களது அலுவலகத்தை மாற்ற முயற்சிக்கின்றன.

ஓம்எம்ஆர்ல இருக்கற ஆயிரக்கணக்கான வணிக வளாகங்கள் இதனால காலியாகற சூழல் வரலாம். கமர்சியலுக்காக கட்டியிருக்கற கட்டிடங்களோட டிசைனை இனி டொமஸ்டிக் பர்ப்பசுக்கு மாத்தவும் முடியாது. மாத்த முயற்சி பண்ணா ஏகப்பட்ட சிக்கல்கள். இந்த பில்டிங்குகளை கோடிக்கணக்கில் செலவு பண்ணி (வங்கிகள்ல கடன் வாங்கி கட்டிய கட்டிடங்கள் தான் ஏராளம்) கட்டி வாடகைக்கு விட்டு

அதுல கிடைச்ச வருமானத்துல இஎம்ஐ கட்டிட்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திகிட்டு இருந்தவங்க நிலை இப்போ ரொம்ப பரிதாபம்.. ஐடி நிறுவனங்கள் ஒன்றன்பின் ஒண்ணா காலிபண்ணிட்டா அந்த ஏரியாலே இதைச் சார்ந்த மத்த வியாபாரங்களும் படுத்துடும்.

வொர்க் ஃப்ரம் ஹோமில் நிர்வாகத்திற்கு செலவினங்கள் மிக மிகக்குறைவு என்பதை அறிந்து கொண்ட ஐடி நிறுவனங்கள் இனி மிகப்பெரிய கட்டிடங்களில் இயங்க வாய்ப்பிருக்கப் போவது இல்லே. பல நிறுவனங்களில் ஆட்குறைப்பும் செஞ்சுகிட்டே வர்றாங்க. இந்த நிறுவனங்களையே நம்பி கான்ட்ராக்ட் பேசிஸ்ல ஓடிகிட்டு இருந்த டிரான்ஸ்போர்ட் சர்வீஸ், கேண்ட்டீன் தொழில் எல்லாம் மோசமான சூழலை சந்திக்க நேரிடலாம்.

கமர்சியல் கட்டிடங்களை ஒண்ணும் பண்ணவும் முடியாது. ஐடி துறைக்கு அடுத்தபடியாக அந்த விஸ்தாரமான சதுர அடி கொண்ட பல அடுக்கு மாடி கட்டிடங்களுக்கு வேறு எந்த துறையும் வர்றதுக்கு வாய்ப்பில்லே. அப்போ அந்த கட்டிடங்களோட நிலைமை ?

இந்த ஏரியாவில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு லோன் கொடுத்த வங்கிகள் இனி தவணையை வசூலிக்க ரொம்ப சிரமப்படணும். வாடகையே இல்லாத கட்டிடத்துக்கு கமர்சியல் டாக்ஸ் இலட்சக்கணக்குல எப்படி கட்றது? இந்த கட்டிடங்களை ஏலத்துக்கு விட்டாலும் எடுக்க யாரும் முன்வரப்போறது இல்லே.

கொரோனா வந்தாலும் வந்துச்சு. இன்னைக்கு பல தொழில்களை தன்னுடைய கோரக்கரங்களால் நசுக்கி போட்டுடுச்சு. பலருக்கு வாழக்கையில் சிக்கனத்தை கத்துக்கொடுத்து இருந்தாலும் இலட்சக் கணக்கானோரின் வாழ்வாதாரத்தை சிதைச்சுடுச்சுன்னு தான் சொல்லணும்.

சென்னைக்கு பெருமை சேர்த்த ஓஎம்ஆர் சாலையானது இந்த கொரோனா முடிந்து சந்திக்கப்போகும் சவால்கள் ஏராளம். மீண்டு வருவதற்கான வழிமுறைகளை பொருளாதார வல்லுனர்கள் ஆய்வு செய்யவேண்டும்.!

இந்த கட்டிடங்கள் கட்டியவர்களாகட்டும், ஐடி துறையையே நம்பி அங்கே தொழில் நடத்திக்கொண்டிருந்த பலரது வாழ்வாதாரம் ஆகட்டும், கொரோனா தாக்கம் முடிந்த பிறகு என்ன ஆகப்போகின்றது என்பதை பொருத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்த ஓஎம்ஆர் ரோடுல ஏராளமான ஹாஸ்டல்கள், ஐடி துறையில் வேலை செய்யற பெண்களுக்கும் ஆண்களுக்கும் கட்டிடங்களை வாடகைக்கு எடுத்து அதில் சின்ன சின்ன அறைகளா தடுத்து அவங்களை தங்க வைச்சு உணவு சமைச்சுப்போட்டு நல்ல காசு பார்த்தாங்க..

இந்த வொர்க் ஃப்ரம் ஹோம்ல எல்லாருமே அந்த ஹாஸ்டல்களை காலி பண்ணிட்டுப் போய்ட்டாங்க. அது மட்டுமில்லே, இந்த துறையில் இருந்த ஒரு நாலைஞ்சு பேரு ஒண்ணா சேர்ந்து அங்க இருக்கற அபார்ட்மென்ட்டுகளை வாடகைக்கு எடுத்து தங்கிகிட்டு இருந்தாங்க. அவங்கள்ல நிறைய பேருகாலி பண்ணிட்டு போய்ட்டாங்க. இதனால அடுக்குமாடி குடியிருப்புகள் நிறைய காலியாகிகிட்டே இருக்கு. வேலை பறிபோனவங்க கொடுத்த மூணு மாசம் அட்வான்சை கழிச்சுட்டு அவங்கவங்க சொந்த ஊருக்கு கிளம்பிட்டாங்க.

**SRS Travels** மட்டும் இந்த ஐடி நிறுவனங்களை நம்பி சுமார் **1000** பேருந்துகளை கான்ட்ராக்ட் பேசிஸ்ல இயக்கிகிட்டு இருந்துச்சு. இப்போ அந்த டிரான்ஸ்போர்ட் சர்வீஸ் இந்த லாக்டவுன்ல தொழில் நடத்தமுடியாம சிக்கித் தவிக்குது.

எத்தனை டிராவல்ஸ் நிறுவனங்கள் தங்களது கார்களை இந்த துறைகளில் கான்ட்ராக்ட் பேசிஸ்ல வாடகை விட்டு தங்களது வாழ்வை நடத்திக்கொண்டிருந்தன. அத்தனையும் தற்போது முடங்கிப் போயிடுச்சு .விடிய காலை **4 to 6 , 350** முட்டை போன்டா சேல்ஸ் ஆகிடும் ஒரு முன்னணி **IT** பார்க் முன்னாடி இருக்கிற கடையில்...**10** இந்தி காரர்கள் **6** தமிழர்கள் வேலை செய்து வந்தனர்.

தண்ணீர், காய்கறிகள், முட்டை, மளிகை இதெற்கெல்லாம் சப்ளை செஞ்சவங்க ...மொத்தத்தில் ஒரு நாளைக்கு **50,000** வரவு செலவு செய்தவர் மனம் நொந்து பேசுகிறார்

இப்போ இந்திகாரங்களும் இல்லை ; தமிழர்களும் இல்லை அவரும் அவர் மனைவி மட்டுமே...என்ன ஆறுதல் சொல்றது ??

ஓலா உபர் வளர்ந்ததெல்லாம் முழுக்க முழுக்க ஐடி துறையால தான். இனி அவங்க வாழ்வாதாரம் மோசமாகக்கூடும். வாகனங்களை லோன் போட்டு வாங்கி இந்த நிறுவனங்கள்ல அட்டாச் பண்ணி ஓட்டிகிட்டு இருந்தவங்க வாங்கின கடனுக்கு இஎம்ஐ கட்டமுடியாம தவிக்கறாங்க. அவங்களோட வாழ்வாதாரமும் போய்டுச்சு.

**- வாட்ஸ் அப் செய்தி- நன்றி**

---

## சிறுகதை



# "வாடகை வீடு"

### தேரூர் மு. கோபி

கணேசன் டெம்போவில் சாமான்களை ஏற்றிவிட்டு பின்னாலேயே மொபெட்டில் மனைவி சுப்பம்மையை கூட்டிக்கொண்டு புதிதாக வாடகைக்கு வீடு பார்த்திருக்கும் வடிவீஸ்வரத்துக்கு கிளம்பினான். அவனுக்கு ஜவுளிகடையில் கணக்குப்பிள்ளை வேலை. முன்பு பிள்ளைமார்களே கணக்குப் பிள்ளைகளாக நிறுவனங்களில் வேலை பார்த்ததால் இப்போது அந்த வேலை பார்க்கும் மாற்று சாதியினரும் அவ்வாறே அழைக்கப் படுகிறார்கள்..

"கணக்குப் பிள்ளை வாரும்வே ." என அழைப்பதை காண முடிகிறது .

வளாகத்திற்குள் பத்து வீடுகள் .ஐந்து வீடுகள் கிழக்கு பார்த்து, அதன் பின்னால் ஐந்து வீடுகள் மேற்கு பார்த்து . இரண்டு வரிசை வீடுகளுக்கும் முன் பக்கம் வெவ்வேறு தெரு. .இருபக்க வீடு களுக்கும் நடுவே பொதுசுவர், அதுவே வீடுகளின் பின்பக்க சுவர். வரிசை வீடுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டி கட்டப்பட்டிருந்தன. ஒரு பக்க வீட்டுக்காரர்கள் இன்னொரு பக்கம் போக வேண்டுமானால் இந்த தெருவில் இருந்து அடுத்த தெருவுக்கு போய் தான் போகமுடியும் .

ஏற்கனவே குடியிருந்த வீடு கணக்குப்பிள்ளை வேலை பார்க்கும் கணேசனுக்கு வேலைக்கு போக வர மிகவும் தோதுவாக இருந்தது. .

அவன் மனைவிக்கு கடைக்கண்ணிகளுக்கு போய் வரவும் வசதியாக இருந்தது. ஆனால் வீட்டுக்கு சொந்தக்காரர் வீட்டை திருத்தி கட்டணும், வாஸ்து சரியில்லை நிறைய வேலை இருக்கு எனச் சொல்லி காலி பண்ண தொந்தரவு செய்தார். அவன் விடிந்தால் போனால் அடைந்தால் வருவான் .அதனால் அவனுக்கு அக்கம் பக்கத்துக்கு வீட்டில் உள்ளவர்களிடம் அதிக பரிச்சயம் கிடையாது. அவன் இயல்பாகவே பேசுவது குறைவு; அதற்கெல்லாம் சேர்த்து அவள் கொட்டி அளப்பாள் .

"இங்கயாவது பக்கத்து வீட்டில் உள்ளவர்களிடம் தொடர்பில் இருங்க. !" வீடு பார்த்தவுடனே கணவனிடம் திரும்ப திரும்பச் சொல்லி வந்தாள்.

'விடிந்தால் போனால் அடைந்தால் வருவான்' என்றதும் நாஞ்சில் நாட்டு ஆரல்வாய்மொழி தான் நினைவுக்கு வரும் !.

காலையில் வீட்டில் குழந்தைகள் தூங்கி எழும் முன்னே விவசாயம் கடலை தோட்ட வேலைக்கு ஆண்கள் வீட்டை விட்டு போய்விட்டு அவர்கள் தூங்கிய பிறகு தான் இரவு வீடு திரும்புவார்கள். அதனால் அப்பனை குழந்தைகள் பார்ப்பதே அரிதாகிப் போகும். எனவேதான் அப்பன் அறியாத ஆரல்வாய்மொழி என்ற பேச்சு வழக்கு உருவானது..

அந்த பேச்சு வழக்கு நடைமுறையில் இல்லை எனலாம் ; .ஏனெனில் இப்போது ஆரல்வாய்மொழி பகுதி நிலங்கள் காத்தடி போட விலையாகி காற்றலைகள் உருவாகி அந்தப் பேரூர் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

கிழக்கு பக்கம் பார்த்த வரிசை வீட்டில் மூன்றாவது வீடு கணேசன் வாடகைக்கு பார்த்திருக்கும் வீடு.. டெம்போவை வீட்டு முன்பு தெருவோரம் நிறுத்தி விட்டு சாமான்களை இறக்கினர். டெம்போகாரன் காலில் வெந்நீர் விட்ட சீராக ' போணும் போணும்' என நச்சரித்தான். .சாமான்களை இறக்கி வைக்க வேலையாட்கள் மூன்று பேர் வந்திருந்தனர். சாக்குகளில் உள்ள பாத்திரப் பண்டங்களை அடுக்களையில் வைத்தனர். கட்டில், அலமாரி போன்றவற்றை இறக்கி கமல குண்டலமாக வைத்து விட்டு கூலிப் பணம் வாங்கி கொண்டு ஓடி விட்டனர் .அதை அதை வைக்க வேண்டிய இடத்தில் பதனமாக கணவனும் மனைவியும் வைக்க வேண்டியதாயிற்று. மூன்று மணி நேரத்தில் வீடு ஒழுங்கு படுத்தப்பட்டது . முடியும் போது காலை பத்து மணி ஆகிவிட்டது .

இன்னும் காலை டிபன் ஆகவில்லை .

‘ ஐயையோ வாடி புள்ள ..ஆளில்லா வீட்டுக்குள்ள...‘என்ற சினிமாப் பாட்டு ரிங் டோனாக கணேசனின் அலைபேசியில் ஒலித்தது !. “நாசமத்து போக. கர்மம் கர்மம் ! முதல்ல இந்த ரிங் டோனை மாத்துங்க ?!” எரிந்து விழுந்தாள் .

தலையசைத்தவாறு அலை பேசியில் பேசியபடி காலைச் சிற்றுண்டி வாங்க சென்றான்.

சிற்றுண்டி வாங்கி வரும் வரை வீட்டை சுற்றிப் பார்த்தவாறு நோட்டமிட்டாள்; எப்படியெல்லாம் வீட்டை அழகு படுத்தலாம் என திட்டமிட்டாள்.

கொண்டல் என்று சொல்லப்படுகிற கீழ்காற்று வீசியது. காற்று நம் வாழ்வில் நீக்கமற நிறைந்திருப்பது . அது வீசும் திசையை கொண்டு அதற்கு பெயர் சூட்டி உள்ளனர் .தெற்கு திசையில் இருந்து வீசும் காற்று தென்றல் காற்று என அழைக்கப்படுகிறது. வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைகாற்று என்கிறோம் .இதனை துன்பமான சூழலுடன் தொடர்பு படுத்துவோம் .மேற்கு திசையில் இருந்து வீசும் காற்று கோடைக்காற்று. இது வெப்பமாக இருக்கும். கொண்டல் காற்றை மலைக்காற்று என்போம்.

பத்து வீடுகளும் நெருக்கமாக கட்டப்பட்டிருந்ததால், நேர் பின் வீட்டில் பேசும் சத்தம் மிகத் தெளிவாக கேட்டது .

அங்கிருந்து வரும் பேச்சொலி மூலம் நிறை மாத சூலி அங்கு இருப்பது உணர முடிந்தது .

“சாப்புடும்மா. சொன்னக் கேளும்மா ?” என ஒரு பெண் சொல்வது கேட்டது .சூலியிடம் இருந்து பதிலேதும் வரவில்லை. வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை .

“ உண்டாயிருந்தா இப்படித்தான் ஒண்ணுமே சாப்பிட பிடிக்காது . நீ இப்படி கிடக்கது எங்களுக்கு சாப்பிடவே பிடிக்கல “

அந்த பெண் புலம்புவதும் கேட்டது .

சூலியிடமிருந்து பதிலேதும் வரவில்லை .

சூலியாக இருந்து தான் அவஸ்தை பட்டதும், எதுவும் சாப்பிட பிடிக்காமல் போனதும் சுப்பம்மைக்கு நினைவுக்கு வந்தது .

இரண்டு முறை சூலியாக இருந்தும் சுப்பம்மைக்கு குழந்தை தங்கவில்லை. ஒன்று பிரசவத்தின் போதும், இன்னொன்று குறை பிரசவத்தின் போதும் இறந்து போனது . அந்த நினைவு மனதில் தோன்றி வருத்தமளித்தது. நிறைமாத சூலியை பார்க்க வேண்டும் என்று ஆவலானது . கணவன் வந்ததும் சொல்லவேண்டும் என நினைத்தாள் .

அப்போது அவனும் சிற்றுண்டி வாங்கிக் கொண்டு வந்து விட்டான் .

சிற்றுண்டியை சாப்பிட்டபடி பேசிக் கொண்டிருந்தனர் .இன்னைக்கு ஒருநாள் ஹோட்டல்ல வாங்கி சாப்பிட்டு விட்டு நாளை முதல் சமைச்சுக்கலாம் என முடிவெடுத்தனர் .

பின்பக்க வீட்டில் இருந்து பேச்சுச் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது .

'யாரோ அந்த வீட்டுக்கு வந்திருக்கிறார்கள் போல ?!

"அவளுக்கு சாக்கோட்டி ஒண்ணுமே சாப்பிடல" அதே பெண்குரல்?!

"அதான பார்த்தேன். நான் வந்ததும் உடனே ஓடி வந்துருவா , அணக்கமே காணலையேன்னு?!" அது வந்திருந்த பெண்ணின் குரலாக தெரிந்தது .

சாப்பிட்டு முடித்ததும் அந்த மேனிக்கே தரையில் தலையணை வைத்து படுத்தனர் . களைப்பு தூக்கமாக சொக்கியது .

' வளாகத்தில் உள்ள அத்தனை வீடுகளிலும் நன்றாக பேசி பழக வேண்டும். சுப்பம்மையும் அதைத்தானே சொல்கிறாள்' என கணேசன் நினைத்தவாறு படுத்திருந்தான்.

' இங்கு உள்ளவர்களிடம் அவரை நல்ல பேசி பழக வைக்கணும்' என அவளும் எண்ணினாள் ' .

இருவரும் உடனே தூங்கி விட்டனர்.

நேற்று இரவு முழுக்க சாமான்களை கட்டி வைப்பதும் அதை, ஒழுங்கு

படுத்துவதும் டெம்போவில் ஏற்ற உதவி பண்ணுவதுமாக இருந்து அவைகளை இறக்கி வைத்து வீட்டில் ஒழுங்கு படுத்தி வைத்ததில் களைப்பாகதானே இருக்கும் !.

தூங்கி எழுந்து குளித்து புறப்பட்டு மதிய சாப்பாட்டுக்கு வெளியே கிளம்பினர். . " சூலி வீட்டுக்கு போய் ஒரு எட்டு பார்த்துட்டு வருவமா ?! "

"போவம் " என்றான்.

அடுத்த தெரு போய் அந்த வீடு சென்றடையும் போது வாசல் கதவு சாத்திக் கிடந்தது. அழைப்பு மணியை அழுத்தியதும் ,உள்ளே அனக்கம் கேட்டது .

"யாரோ வர்றாங்க ?" சுப்பம்மை சொன்னாள் .

சிறிது நேரத்தில் நடுத்தர வயது பெண் ஒருத்தி கதவை திறந்தாள் . சோடாபுட்டி கண்ணாடி போட்டிருந்தாள். ; கூர்ந்து பார்த்தாள் . இடுப்பில் தூக்கி சொருகிய சேலையை சரி பண்ணிக் கொண்டாள் .வீட்டில் கைச் சோலியாய் இருந்திருப்பாளாக இருக்கும் .

" யாரு நீங்க ? " சோடா புட்டி கேட்டாள்.

" நாங்க பின் வீட்டுல புதுசா குடி வந்திருக்கோம். " இருவரும் சேர்ந்து சொன்னார்கள் .

அவள் லேசாக சிரித்து வைத்தாள் .

" உள்ள வாங்க ! "

உள்ளே போய் சோபாவில் உட்கார்ந்தனர் .மின் விசிறியை போட்டு விட்டு அவர்களுக்கு எதிரே மடக்கு செயரை இழுத்து போட்டு அதில் உட்கார்ந்தாள். .நலம் விசாரித்துக் கொண்டனர் .

ரெம்ப பேர் நலம் விசாரிக்கும் போது 'சுகம்மா இருக்கேளா ? ' என கேட்பதற்கு பதில் "சும்மா இருக்கேளா?" என்று கேட்பதை போல இருக்கும்.

"உங்க வீட்டுல சூலி இருக்காளோ?!, அவளை நீங்க சாப்பிட சொல்லி வற்புறுத்துவது எங்க வீடு வரை கேட்டுது, அதான் ஒரு நடை வந்து பார்த்துட்டு போலாம்னு வந்தோம் !"

"அப்படியா... ரெம்ப சந்தோசம் . அவளுக்கு கழியல்ல இவ்வளவு நேரம் அரற்றிக்கிட்டு இருந்தாள். இப்பதான் ஐந்து நிமிசமா கண்ணயர்ந்து தூங்குகா"

"அப்ப எழுப்ப வேண்டாம் ,பொறவு வாரோம் !."

"ஜூஸ் குடிச்சுட்டு போலாமே ? "

" வேண்டாம், ஹோட்டலுக்கு சாப்பிடப் போறோம். பொறவு வாறோம். நாளைல இருந்து தான் வீட்டுல சமையலை தொடங்கணும் ? "

" அப்ப இன்னைக்கு எங்க வீட்டுல சாப்பிடுங்க , சமைச்சாச்சு . சாம்பாரு வச்சாச்சு, முருங்க கீரை துவரன் ரெடி .குக்கர்ல வச்சா அஞ்சு நிமிசத்துல சோறு ரெடி ஆயிரும். சாப்பிட்டு போங்களேன்."

" இன்னொரு நாள் வாறோம் , இங்கதான இருக்கோம் .இனி அடிக்கடி வந்து போலாமே ?! அப்ப சாப்பிடலாம் " அங்கிருந்து கிளம்பினர். சாப்பிட்டு விட்டு வரும் வழியில் சுப்பம்மை, "சூலி வீட்டு அம்மா எவ்வளவு பாசமா இருக்காங்க பார்த்தேளா ?! ,சூலிக்கு கொடுக்க இனிப்பு பொட்டலம் வாங்கிக் கொண்டு போவோம் ."என்றாள்.

அந்த வீட்டில் பகலிலேயே கொசுக்கடி இருந்தது.' கொரோனா தொற்று கொசுக்களை தொற்றினால் அத்தனை கொசுக்களும் மாண்டு போய் விடும். கொசுக்கடி இல்லாத தூக்கம் வாய்க்குமே! 'வித்தியாசமாக யோசித்தவாறு படுத்திருந்தான் ! .

சாயும்காலம் நடை பயிற்சிக்கு போகும் போது திரும்பவும் அந்த வீட்டுக்கு போயினர். மறக்காமல் வாங்கி வைத்த இனிப்பு பொட்டலத்தையும் எடுத்து சென்றனர் .

இப்போது வீடு திறந்து கிடந்தது . முன் அறையில் தையல் எந்திரத்தில் அந்தப் பெண் ஏதோ தைத்துக் கொண்டிருந்தாள் . இவர்களை கண்டதும் சிரித்த முகத்துடன் சிநேகத்துடன் வரவேற்றாள். சோபாவில் துவைத்த துணிகள் மடித்து வைக்கப்பட்டிருந்ததால் இவர்கள் உட்கார வேண்டி தையல் எந்திர இருக்கையில் இருந்து எழுந்து அவற்றை எடுத்துக் கொண்டு

" வாங்கோ உட்காருங்கோ" என்றவாறு வீட்டுக்குள் போனாள் .

சுப்பம்மையும் கணேசனும் சோபாவில் உட்கார்ந்தனர் .சூலியை தேடி பார்வையை சுழற்றினர் .

"அவளை கூப்பிடுங்க " என்றாள் சுப்பம்மை .

கணேசன் வீட்டின் உள்ளே நோக்கினான் .

" கவனமா போ, அவசரப்படாத விழுந்திடப் போற ! " வீட்டின் பின்னால் இருந்து ஆண் குரல் கேட்டது .

" ஜனனி வாம்மா ,அப்பாக்கு உடம்புக்கு முடியல, உன்ன பிடிக்க முடியாது, பதனமா வா, " என்றவள் இவர்கள் பக்கம் திரும்பி "அவா இப்படி இருக்கிறதுனால நானோ அவ்வோளோ ஒரு இடம் போறதில்ல " .

""வாஸ்தவமான பேச்சு . இந்த நிலைல அவளை தனியா விட்டுட்டு போக மனசு வராதுல்லா? " சுப்பம்மை சொல்ல ,

யசப்பாட்டாக கணேசன் " ஆமாமா " என தலையசைத்தான்.

" அவள கூட்டிட்டு வாங்கோ .கேட்டேளா . பின் வீட்டுல புதுசா குடிவந்தவங்க பார்க்க வந்திருக்காங்க ?! "

." ம்". ஆண்குரல் உள்ளே இருந்து பதிலாக வந்தது .

தொடர்ந்து ஒட்டடை குச்சி போல காணப்பட்ட நபர் மூன்று அடி உயரம் கொண்ட நாயை சங்கிலியால் பிடித்தவாறு வந்தார் .அதன் இழுப்புக்கு ஈடு கொடுத்து பின்னால் சாய்ந்தவாறு வந்தார் .

" பாத்து கவனமா வாங்க.. இழுத்து தள்ளிடுவா."

சோபா பக்கத்தில் உள்ள பிளாஸ்டிக் வயர் கட்டிலில் அவர் உட்கார்த்தார். நாய் அவர் அருகே காலடியில் சாதுவாகப் படுத்துக் கொண்டது .

' என்னங்க...நாயை கூட்டிட்டு வாராரு ?! '

யோசித்தவாறு சுப்பம்மை கணவனைப் பார்த்தாள்.

' அதான ' அவனும் திகைத்தான் .

கண்களால் வார்த்தைகளை பரிமாறிக் கொண்டனர் .

" சூலியா இருக்குறது ?! "ஆச்சர்யப்பட்டு சுப்பம்மை கேட்டே விட்டாள்.

கணேசன் மூவரையும் மாறி மாறி பார்த்தான். நாயையும் பார்த்தான் .

" இவதான் ! பிள்ளை போல பார்க்கிறோம் ! ரெம்ப சுறுசுறுப்பா இருப்பா. யாரு வந்தாலும் பாசத்தோட மேல பத்திக்கிட்டு ஏறுவா .இப்ப கழியாமல் இப்படி சோர்ந்து இருக்கா!"

கணேசனும் சுப்பம்மையும் ஒருவருக்கொருவர் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டனர். அவர்களால் அதை ஜீரணிக்க முடிய வில்லை !

வாங்கி சென்ற இனிப்பு பொட்டலத்தை கொடுத்து விட்டு வந்தனர்

." என்னால தாங்க முடியல சாமி " சுப்பம்மை கணவனிடம் சொன்னாள்.

## ஒட்டு மொத்த மனித இனமே இக்கட்டான நிலையில் உள்ளது.

*(பிரபஞ்ச இருத்தல் எனும் புனிதத்தில் இருந்து மனிதன் தன்னை துண்டித்துக் கொள்ளும் போது)*

*தற்போதைய உலக நெருக்கடி ஒரு அசாதாரண இயல்புடையது; இதுபோன்ற பல பேரிடர்களை உலகம் சந்தித்திருந்த போதிலும் தற்போதைய நெருக்கடி மனித வரலாற்றிலுள்ள வழக்கமான பேரிடர் போல அல்ல. இந்த பெரும் குழப்பமான சூழ்நிலை உலகஅளவி லானது. இது ஒரு குறிப்பிட்ட தேசத்தினுடையது மட்டும் அல்ல. மாறாக உலக உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பாதிக்கின்ற ஒன்று.உடலியல் ,மனோரீதியாக, நீதி நெறி மற்றும் ஆன்மீக ரீதியாக, பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஒருமைப்பாடற்ற குழப்பமான சூழ்நிலை உருவாகியுள்ளது நாமோ செங்குத்துப் பாறையின் ஆபத்தான விளிம்பில் நின்று கொண்டு*

*சிறிய விஷயங்களுக்காக சச்சரவு செய்து கொண்டிருக்கிறோம். பேரளவில் இடையூறு விளைவிக்கும் இந்த உலக நெருக்கடியின் ஆழத்தை, அதன் அசாதாரணமான நிலைமையை சிலர் மட்டுமே உணர்வதாகத் தெரிகிறது.*

*செங்குத்துப் பாறையின் ஆபத்தான விளிம்பில் நின்று கொண்டிருக்கும் சிலர், இந்த குழப்பத்தைப் பார்த்துவிட்டு, வாழ்க்கை முறையை மறுகட்டமைப்பு, மறு சீரமைப்பு செய்ய விழைகிறார்கள். அவர்களே குழப்பத்தில் உள்ள நிலையில், அவர்கள் மேலும் குழப்பத்தை உண்டாக்கவே செய்வார்கள்.*

***J.Krishnmurthy***

***Madras ,22 October 1947, The collected Works, Vol.IV, Vasantha Ethal***

# பேரா.க.ப.அறவாணரின் 79 ஆம் பிறந்த நாள் விழா



அறவாணர் ஆராய்ச்சி அறக்கட்டளை, பேரா.க.ப.அறவாணரின் 79 ஆம் பிறந்த நாள் விழாவினை இணையவழியில் நிகழ்த்தியது. அவ்விழாவில் அறவாணரின் மகனார் திரு.க.அ.அறிவாளன் பதிப்பித்த ' அறவாணரின் அன்புரைகள் 'என்ற நூல் வெளியிடப்பெற்றது.

முன்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி பொன்னம்மாள் நூலை வெளியிட, அகிலன் அறவாணன் பெற்றுக்கொண்டார். விழாவிற்குச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் இரவீந்திரன் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் இரவிக்குமார் ' தொடரும் பண்பாட்டுப் படையெடுப்புக்கள் 'என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்ற, விழா இனிதே நிகழ்ந்தேறியது.

இந்த இணைய விழாவினை ஒருங்கிணைத்துச் செயலாற்றிய வர்கள் அறக்கட்டளைத் தலைவர் மொழியியல் பண்பாட்டுத் துறைப் பேராசிரியர் முனைவர் செல்வராசு, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகப் பேராசிரியர் அறவேந்தர், ஏ.வி.சி.கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் தமிழ் வேலு ஆகியோர் .

# முனைவர் பி. யோகீசுவரன்

## என் எண்ண ஓட்டத்தில் பழைய நினைவுகள்
## சென்ற இதழ்த் தொடர்ச்சி.....
## வரலாற்று வல்லுநர் முனைவர் கே.கே.பிள்ளை



**கே.கே.பிள்ளை** வரலாற்றின் பல்வேறு கூறுகளை நடுநிலை நின்று எழுதியவர். பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிர்வாகம் போல் சென்னை மாகாணத்தில் ஆங்கில அரசு செய்த நிர்வாகத் திருத்தங்கள் தென்னிந்திய வரலாறு, குறிப்பாகத் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு மற்றும் தமிழ் நாட்டில் சாதி பாகுபாடு என அவர் பல கருத்தியல்களில் கருத்திருத்தி ஆய்ந்துள்ளார்.

அவர் ஆய்வுரையின் முதற்படி தான் சுசீந்திரம் கோயில். இந்து சமயச் சார்பான கோயில்களில் ஒரு வித்தியாசமான கோயில் சுசீந்திரம். இந்து சமயத்தின் மும்மூர்த்திகளை ஒருங்கிணைத்து வழிபடப் பெறும் அக்கோயிலின் வரலாற்றை அறிவதற்கு மூலமாகத் தமிழகத்தில் கோயில்கள் தோன்றிய வரலாற்றை நாம் அறிதல் வேண்டும்.

தமிழர்கள் தொல் பழங்காலத்தில் இயற்கையின் வெளிப்பாடான சூரியன், சந்திரன், மலை, மழை மற்றும் மாடு, மரம், நாகம் போன்றவற்றை வணங்கி வாழ்ந்தனர். தங்களுக்கு நல்லன செய்த பெருமக்களின் நினைவைப் போற்றும் வகையில் ஊரின் எல்லையிலே முதன்மையான இடங்களிலே கல்லை நட்டு அப்பெருமக்களைத் தெய்வமாக வணங்கி வாழ்ந்தனர். நடுகல் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியத்தில் படித்தறிய முடிகிறது. தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலக்கிடப்பைப் பாகுபாடு செய்து ஒவ்வொரு திணையிலும் வழிபடப் பெறும் தெய்வங்களைக் கூறிச் சென்றுள்ளார். ஆனால் கோயில் கட்டி கும்பிட்டார் என்பதற்குச் சங்க இலக்கியத்தில. சான்று இல்லை.

சங்ககால மக்களின் வாழ்க்கையை உற்று நோக்கினால் அவர்கள் வாழ்விற்கு வேண்டும் பொருள் , உற்பத்தி, தொழில்கள், வாணிகம் போன்றவற்றிலேயே கருத்திருத்தியிருக்கின்றனர் உலகியல் வாழ்வே உயர்ந்து நின்றது.

*இயற்கையின் சீற்றத்தாலும், விலங்குகளால் வரும் இடர்களாலும், மேலும் தம் செல்வத்தைக் கொள்ளையடிக்க வரும் மாற்றார் தரும் துயரத்தாலும் பாதிக்கப்படும் பொழுது தங்களை காக்கும் வீரர்களையே மக்கள் சார்ந்திருந்தனர். காலப்போக்கில் அவ்வீரர்கள் சிற்றரசர்களாகவும், பேரரசர்களாகவும் வளர்நிலை பெற்றனர்.*

*காத்து நிற்றலே அரசர் முதற் கடமையானது. அவ்வாறு படி நிலை வளர்ச்சியாக வந்தவர்கள் தான் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆவர். இவ்வாறான சூழ்நிலையிலும் தமிழகத்தில் ஆன்மீகச் சிந்தனைகள் துளிர்விட்டன. இறை வழிபாடும் அரும்பியிருந்தன.*

*வடநாட்டிலிருந்து தமிழகத்தில் பரவிய சமண பௌத்த மதக் கருத்துக்கள் மக்கள் வாழ்விலும், இலக்கியங்களிலும் வளரத் தொடங்கின.*

*தமிழகத்தில் காலூன்றியிருந்த சைவ வைணவக் கோட்பாடு களைக் கொண்டோர் அப்புறச் சமயங்களை அப்புறப்படுத்த முனைந்தனர்.*

*இதன் ஊடே கி.பி. நான்காம் நூற்றாண்டில் தமிழரல்லாத பல்லவர்கள் தமிழ் நாட்டின் வட பகுதியான தொண்டை நாட்டைக் கைப்பற்றி காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர். அவர்கள் பிராமணர்களுக்கும், வடமொழி வேதங் களுக்கும் முதன்மை கொடுத்தனர்.*

*பல்லவர்கள் தங்களை பிரம்ம சத்திரியர் எனக் கூறிக் கொண்டனர். அவர்கள் தான் தமிழ் நாட்டில் நாம் இன்று காணும் கோயில் கட்டமைப்பிற்கு முன்னோடிகள்.*

*வடபுலத்திலுள்ள மகத நாட்டிலிருந்து பிராமணர்களை வரவழைத்து அவர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினர். தமிழ்நாட்டில் அக்கிரகாரங்களை அமைத்துக் கொடுத்தவர்களும் தேவதாசிகளான தேவரடியார்களை கோயில்களில் பரப்பியவர்களும் பல்லவர்களே ஆவர் எனக் கூறுகிறார் கே.கே.பிள்ளை.*

*இந்த வரலாற்றை யெல்லாம் ஆய்ந்து கே.கே.பிள்ளை தன் நூற்களில் பதிவு செய்திருப்பது ஈண்டு அறிய வேண்டிய செய்தி. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி வலுப்பெற்றிருந்தது.*

*நரசிம்ம பல்லவன், மகேந்திர பல்லவன் போன்ற பேரரசர்கள் தோன்றித் தமிழகத்தின் வட பகுதியெங்கும் தம் ஆட்சி அதிகாரத்தை நிறுவினர்.*

*அவர்களை எதிர் கொள்ள முடியாமல் தமிழ் அரசுகள் வலுவிழந்து போயின. கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு காலங்களில் அவர்கள் கொடியே தமிழகத்தில் ஓங்கி நின்றது.*

*ஆறாம் நூற்றாண்டு முதல் இன்றைக்கு நாம் பார்க்கும் காஞ்சிபுரத்திலும், மகாபலிபுரத்திலும் உள்ள கோயில்கள் பல, அவர்களின் திருப்பணியே ஆகும். கோயில்கள் கலைத் தன்மையுடன் அமைக்கப் பெற்றன. கோயில்களில் ஆடலும் பாடலும் பெருகின. நாட்டியமும் இசையும் கோயிலோடு ஒன்றிணைந்து வளர்ந்தன. கோயில்கள் வீட்டிற்கு அடுத்த படியாக மக்கள் கூடும் பெருங்கலைக்கூடங்களாக அமைந்தன.*

*கலைகளை வளர்ப்பதிலும், அரச நிர்வாகத்தை நடத்துவதிலும் நாட்டின் எல்லைகளைத் தெற்கு நோக்கி விரிவு படுத்துவதிலும் மகேந்திர பல்லவன் முதன்மை பெற்று விளங்கினான். அதே நேரத்தில் அவர்கள் ஆட்சியில் தான் சாதிப் பாகுபாடு, தீண்டாமை போன்றவை தமிழ் மண்ணில் வீரியம் பெற்றன. அடிப்படையில் பல்லவர்கள் பிராமணர்கள் தான். தங்கள் போர்த்திறத்தை வளர்த்துக் கொண்டு சத்திரியர்களாக மாறியிருக்க வேண்டும் என்பது கே.கே.பிள்ளையின் கணிப்பு. அவர்கள் தங்களைப் பிராமணச் சத்திரியர் எனக் கூறிக் கொண்டதை முன்னர் பார்த்தோம்.*

*சங்க நாட்களிலேயே சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தமிழ் நாட்டில் பரவியிருந்தன. சங்க இலக்கியத்தில் சமண பௌத்தச் சிந்தனைகள் கொண்ட பாடல்களைப் பார்க்க முடிகிறது. சிறப்பாகச் சமணப் புலவர் பலரைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.*

*கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், ஏழாம் நூற்றாண்டிலும் சிவனை முழு முதற்கடவுளாகக் கொண்ட சைவமும், அவ்வாறே திருமாலை முதன்மையாகக் கொண்ட வைணவர்களும் தங்கள் சமயப் பிரிவுகளை வளர்த்தெடுக்க முனைந்தனர்.*

*அதனைச் சமய எழுச்சிக் காலம் என்பர்.*

*அவர்கள் வட புலத்திலிருந்து வந்து பரவிய சமண பௌத்த மதங்களைத் தமிழகத்திலிருந்து அப்புறப்படுத்த கிளர்ந்து எழுந்தனர். இவர்களின் எதிர் வினையால் சமண பௌத்தங்கள் தமிழகத்தில் ஒடுங்கின.*

*சைவத்தின் 63 நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தம் தம் சமயத்தைத் தமிழகத்தில் நிலை கொள்ளச் செய்ய அரும் பாடுபட்டனர். சைவக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், அப்பர் எனப்பெறும் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவாரப் பாடல்களையும், மாணிக்கவாசகர் திருவாசகத்தையும் பாடி, சைவ நெறியை வளர்த்தெடுத்தனர்.*

*அவ்வாறே பெரியாழ்வார், நம்மாழ்வார், பூதத்தாழ்வார், குலசேகர ஆழ்வார், ஆண்டாள் போன்ற பன்னிரு ஆழ்வார்களும் வைணவத்தின் வல்லமையைப் பெருக்கும் நோக்கில் திவ்விய பிரபந்தங்களைப் பாடி மக்களைத் தங்கள் பக்கம் ஈர்த்து வந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் திருஅண்ணாமலையில் சிவன் கோயிலை சோழ அரசர்கள் கட்டுவித்தனர்.*

*தஞ்சையில் பேரரசன் ராஜ ராஜன் (985-1016) தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான். ஸ்ரீரங்கநாதர் கோயில் 14 ஆம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரால் பெரிய கோயிலாகக் கட்டப் பெற்றது.*

*இங்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய ராஜ கோபுரம் உள்ளது. இவ்வாறு சைவர்களும், வைணவர்களும் வேறுபட்ட சமயத்த ராகவே நின்று சமயப் பணி செய்து வந்தனர்.*

*வேற்றுமையில் ஒற்றுமை என்பதற்கிணங்க இவ்விரு சமயத்தாரும் ஏதேனும் ஒருவழியில் இணங்கிப் போகுதலே சாலச் சிறந்தது என்ற கருத்தியல் வளர்ந்தது. அவ்வாறு கருத்துடையவர்களில் ஒருவராகக் கேரளத்திலுள்ள காலடி என்ற ஊரில் ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஆதிசங்கரர் இந்தியா எங்கும் பயணம் செய்து சைவ வைணவத்தவரை ஒருமுகப்படுத்த முயன்றார்.*

*அவர் தோற்றுவித்ததே காஞ்சிபுரம் சங்கரமடம் என்பதை முன்னரே பார்த்தோம்.*

*அவர் சுசீந்திரம் கோயிலுக்கும் வந்ததாகக் கூறப்படுகிறது.*

*ஏழாம் நூற்றாண்டில் சுசீந்திரம் கோயில் தோன்றிய காலத்தில் அங்கு கோயில் கொண்டிருக்கும் தெய்வம் சிவபெருமான் என வணங்கப் பெற்றது.*

*ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் தாணுமாலயன் என அக்கோயில் தெய்வத்திற்குப் பெயர் வந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் முற்கூறிய ஒருமைப் பாட்டின் பயன் என அறிந்து கொள்ளலாம்.*

*சிவன்-தாணு, மால்-விஷ்ணு, அயன்- பிரம்மா என்ற மும் மூர்த்திகளையும் ஒருங்கிணைத்தனர் எனக் கருதப் பெறுகிறது. சுசீந்திரம் கோயிலில் முதலில் தோன்றிய சன்னதி கொன்றையடி எனத் தெரிய வருகிறது. கொன்றை மரத்தின் அடியில் இறைவன் ஒன்றியிருந்தான் என்பது ஐதீகம். பொதுவாக மரத்தைத் தெய்வமாக வழிபடுவது தமிழர் மரபுதான்.*

***இதனை ஆய்வாளர் முனைவர் எஸ்.பத்மநாபன் சான்று களுடன் விவரித்துள்ளார்.***

*அதைப் போல் மரத்தை உறவாகவும் கருதும் பண்பு தமிழர்க் கிருந்தது என்பதைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாகக் காணலாம். மரங்கள் நிறைந்த ஓரிடத்தில் தலைவன் தலைவியைச் சந்திக்கிறான். காதல் உணர்வு மிகுந்த நிலையில் காதலன் காதலியை அணைத்துக் கொள்ள விரும்புகிறான். அப்பொழுது அப்பெண் அங்கிருந்த மரத்தைச் சுட்டிக் காட்டி, அதோ அக்காள் நிற்கிறாள் என்று கூறி அவன் எண்ணத்திற்கு இசையவில்லை என நற்றிணைப் பாடல் ஒன்று கூறுகிறது.*

*உறவாக மட்டுமன்று, தெய்வமாகவும் வழிபட்டனர். இன்றளவும் அரசமரம், ஆலமரம், வேப்பமரம் போன்றவற்றைத் தெய்வ நிலையில் பார்க்கும் இயல்பினைப் பார்க்கின்றோம். மரத்தை வழிபடுதல் தமிழர் மரபு எனக் கூறலாம்.*

*நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான சிந்து வெளிநாகரிகம், தமிழர் நாகரிகம் என ஜான் மார்சல், எஸ்.கே.சட்டர்ஜி போன்ற பெரும் ஆய்வாளர்கள் உறுதி படுத்தி வந்திருக்கின்றனர். பின்லாந்தைச ் சார்ந்த பேராசிரியர் அஸ்கோபார் போலா தன் குழுவுடன் வந்து இந்தியாவின் வடமேற்குப் பகுதி யோடு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகியவற்றுடன்*

உள்ளடக்கமாகக் கொண்டு தோன்றியிருந்த அச்சிந்து வெளி நாகரிகத்தை ஆய்ந்தார். அவர் 2010 ஆம் ஆண்டு கோயமுத்தூரில் நடந்த உலகச் செம்மொழி மாநாட்டில் ஆற்றிய உரையில் அன்றைய திராவிடர்கள் (தமிழர்கள்) மரத்தை வழிபட்டு வந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

சான்றாக ஒரு முத்திரை முத்திரைப் படத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்.



"The scence at the right and of one tablet from Mohenjodara(478) shows a human being who kneels in front of a tree and extends a V shaped object towards it."

என்ற அவர் கூற்று சிந்து வெளியில் ஒரு மனிதன் ஒரு மரத்தின் முன் மண்டியிட்டு வணங்குவதையும் மாலை போன்ற ஒரு அணியை அம்மரத்திற்குச் சூட்ட விரும்புவதையும் அப்படம் புலப்படுத்துகிறது.

குறிப்பு:- ஐந்து நாள் நடந்த கோயமுத்தூர் மாநாட்டில் பல ஆய்வு அரங்குகள் நடந்தன. அவற்றில் ஓர் அரங்கிற்குத் தலைமை தாங்கியும் ,பிறிதொரு அரங்கில் திருக்குறள் பற்றிய கட்டுரை வாசித்ததையும் நான் நினைவு கூர்கின்றேன்.

---

**இந்த மாத நாஞ்சில் மலர் வளர்ச்சிக்கு நன்கொடையளித்தபெருமக்களுக்கு நன்றி**

முனைவர் மு.ஆறுமுகம் ரூ.3000/-
திரு.சுந்தர் சுப்பிரமணியம் ரூ.3000/
முனைவர் தாயம்மாள் அறவாணன் ரூ.1000/-
இராஜலட்சுமி கல்விக் குழுமம் ரூ.5000/-

# மூலிகை மருத்துவக்கோவை

உ...இராமநாதன்
மேநாள் இணைப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்



## நெருஞ்சி

இந்திய நாட்டு மூலிகையாம்
எங்கும் கிடைக்கும் மூலிகையாம்
பால்வினை நோய்களைக் குணமாக்கும்
பாங்காய் வாதத்தைத் தணிக்கும்
சிறுநீர் பிரியாது அவதிப் படுவோருக்கு
சிறந்த மூலிகை நெருஞ்சி
ஒவ்வாமையை நன்கு குணமாக்கும்
ஒற்றைத் தலைவலியை நீக்கும்

## செவ்வாழைப்பழம்

சிவப்பு நிறம் கொண்டது அதனால்
செப்புவார் செவ்வாழைப் பழமென்றே
நித்திரையை நன்கு தூண்டும்
நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
உடலை நன்கு வலுப்படுத்தும்
உள்ளுறுப்புகளைச் சீராய் இயக்கும்
மாதவிடாய் கோளாறுகளைப் போக்கும்
மனச்சோர்வை நன்கு குறைக்கும்

## முருங்கைக்கீரை

நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும்
நரம்புத் தளர்ச்சியைப் போக்கும்
தாய்ப்பாலை அதிகம் சுரக்கும்
தனிக்குணம் கொண்ட கீரையாம்
இரத்த விருத்தி ஏற்படுத்தும்
இருமல் சளியைத் தணிக்கும்
மலச்சிக்கலை நன்கு நீக்கும்
மேனியைப் பளபளப்பாக வைக்கும்

## நில வேம்பு

பல்லாயிரம் ஆண்டுகளாய் சிறப்பாய்
பாரதத்தில் பயன் படுத்தும் மூலிகையாம்
கல்லீரல் நோய்களைத் தணிக்கும்
குடல் கோளாறுகளைச் சீராக்கும்
மலேரியா நோயைக் குணமாக்கும்
மகத்தான ஆற்றல் கொள் மூலிகையாம்
சுவாசக் கோளாறுகளைப் போக்கும்
சளித்தொல்லையை முழுதும் மாய்க்கும்

## இந்திய சுதந்திரப்போராட்டத்தில் "காமா அம்மையார்"

### (தொகுப்பு : ஜெய்ஹிந்த் செண்பகராமன் அவர்களின் பேரன். பொ.சேதுசேஷன்)



அந்த இந்திய சுதந்திரக்கொடியை 'காமா அம்மையார்' உலகுக்கு அறிமுகப்படுத்திய சரித்திர நிகழ்வு முன்பாக, நடந்த எல்லா உலக மாநாடுகளிலும், நம் இந்திய பிரதிநிதிகள், தங்களுடன் இங்கிலாந்தின் 'யூனியன் ஜாக்' (British Union Jack) கொடியைத்தான் கொண்டு சென்றார்கள். சர்வார்க்கர் தான் நமது காமா அம்மையாரை இந்த மாநாட்டுக்கு ஒரு சுதந்திர இந்திய கொடியை வடிவமைத்து எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார். மேலும் அக்கொடி மூன்று வர்ணங்களுன் இந்திய மூவர்ண கொடியாக மிளிர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதன்படி, காமா அம்மையாரும், சியாம்ஜி கிருஷ்ணவர்மா, மனைவி பானுமதிஜியும், சேர்ந்து நல்ல உயர்தரப்பட்டுத்துணியில், ஒரு மூன்று கொடிகளை தயார் செய்தார்கள். அதில் உள்ள 'பச்சை' வர்ணம் நம்முடய தைரியத்தையும், வீர உணர்வுகளை உணர்த்தும், நடுவில் 'காவி' வர்ணம் நமது வெற்றியைப் (பின்பு அது வெள்ளை நிறமாக மாற்றப்பட்டது), சிகப்பு, நம்முடைய பலத்தையும் தூண்டும் விதமாக அமைக்கப்பட்டது. அதில் மேல் பகுதியில் உள்ள எட்டு தாமரைப்பூக்கள், அப்போதய இந்தியாவில் இருந்த, எட்டு பிராந்தியங்களை (Province) எடுத்துக் காட்டியது. நடுபகுதியில் 'வந்தேமாதரம்' என்று இந்திமொழயில் பொறிக்கப்பட்டிருந்தது. கீழ்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள, சூரியன் இந்து மதத்தையும், பிறைநிலா இஸ்லாமிய மதத்தையும் குறிப்பிடுவன.

இவ்வாறு மூவர்ண இந்திய கொடியுடன் தோன்றி காமா அம்மையார் ஆற்றிய உரை, அன்று ஜெர்மனியில் முக்கிய பத்திரிக்கையான 'லெப்ஜிகர் ஜெரிட்டுங்' (Leipziger Xeiting) வெளியானது. அதில் அந்த காங்கிரஸ் மகாசபையில், பளபளக்கும் பட்டாடையுடன். அனைவரையும் கவரும் முகப்பொலிவுடன் தோன்றி, அந்த மகாசபையை அலங்கரித்தார். மேலும், ஆங்கிலேயர்களால்

*ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டினார். கடைசியாக, ஒடுக்கப்பட்ட இந்தியர்களின் மூவர்ண கொடியை அந்த மகாசபையில் பட்டொளி வீச பறக்கச்செய்ய அந்த சர்வதேச மகாசபை 'வெற்றி முழக்கத்துடன் அன்றைய நிகழ்ச்சி கள் நிறைவு பெற்றன'.*

*மறுநாள், திரு.ஹென்றி-ஹிண்ட்மேன் உதவியுடன் கிழே கண்ட, 'தீர்மானத்தை' மகாசபை நிறைவேற்றுமாறு சபையில் காமா அம்மையார் சமர்ப்பித்தார்.*

*"இந்தியாவில் இந்த பிரிட்டிஷ் ஆட்சியை அனுமதிப்பது மிகவும் அபாயகரமானது. எனவே இவர்கள் இந்திய மக்களின் உணர்வுகளை, காயப்படுத்துவதை, இந்த பரந்த உலகத்தில் உள்ள விடுதலை விரும்பிகள் தடுத்து நிறுத்த வேண்டும் அதோடு உலக மக்கள் தொகையில் 'ஐந்தில் ஒரு பாகமாக இருக்கும் இந்திய மக்களை ஒடுக்கப்பட அனுமதிக்க கூடாது. மேலும் சமூக நீதியின்படி, எந்த மக்களையும் அரக்கத்தனமான, சர்வாதிகார ஆட்சியில் கீழ் கொண்டு வருவது தவறு".*

*இந்தத் தீர்மானம், அந்த உலக சோஸலிஸ அமைப்பை, ஆங்கிலேயர்களை, இந்தியாவிலிருந்து விரட்டும்படி கோரும் ஒரு தீர்மானமாகும். அந்த நிகழ்வு ஒன்றே கோடிக்கணக்கான இந்திய மக்களை கொடுங்கோலர்களிடமிருந்து விடுவிக்கும் ஒரே வழியாகும்.*

*ஆனால், இங்கிலாந்து குழுவின் மற்றொரு அங்கத்தினரான திரு.ராம்ஸ்டே மக்டோனால்டு (Mr.Ramsday Macdonald) (அவர் பின்னர், பிரிட்டனில், தொழிலாளர் கட்சி சார்பாக முதல் பிரதம மந்திரியாக பதவி வகித்தவர்). காமா அம்மையார் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்ததோடு, அது அச்சபையில் நிறைவேற்றப் படாமல் பார்த்துக் கொண்டார். மேலும் இந்த தீர்மானம் பலவேறு சட்டசிக்கலால், ஓட்டெடுப்புக்கு விடப்படவில்லை.*

*இதற்கு முன் நடந்தேறிய, சர்வதேச சோஷலிஸ்ட், கூட்டத்தில் ஒன்றிலும் இவ்வாறாக ஒரு இந்திய அங்கத்தினர் அதுவும் ஒரு பெண்மணி பிரபலமடையவில்லை. மேலும் காமா அம்மையார், அன்று அறிமுகப்படுத்திய மூவர்ணகொடிதான், இன்று நம் சுதந்திர*

*இந்தியாவில் சில மாற்றங்களுடன் பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கிறது. அந்த காமா அம்மையாரின், சரித்திர புகழ் வாய்ந்த அந்த கொடி, இன்றும் பூனேயில் 'கேசரி மராட்டா' புத்தக சாலையில் வைக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு காமா அம்மையார் கொண்டு வந்த தீர்மானம் அந்த மகாசபையில், ஓட்டெடுப்புக்கு விடப்படவில்லை என்றாலும், அந்த தீர்மானம் கொள்கையளவில் அந்த மகாசபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று அந்த கூட்டத்தின் தலைவர் சிங்கர் (Singer) கருத்து வெளியிட்டுள்ளார்.*

*மேலும் காமா அம்மையாரின் ஜெர்மனி நாட்டில் ஸ்டட்ஹார்ட் நகரில் நடந்த கூட்டத்தில், தன் பேச்சுத்திறமையாலும், தன் வீரத்தை வெளிப்படுத்தியும், அமெரிக்க அங்கத்தினர்களை, கவர, அவர்கள், கூட்டம் முடிந்ததும், அம்மையாரை, தங்கள் நாட்டிற்கு வந்து, அவர்கள் ஏற்பாடும் செய்யும் கூட்டத்தில் பேச அழைத்தனர். அந்த அழைப்பை ஏற்று காமா அம்மையார், பாரீஸ் நகரம் திரும்பி ஒருமாத இடை வெளிவிட்டு, அக்டோபர் மாதம் 1907-ஆண்டு, பிரான்ஸ்இல் உள்ள, துறைமுகப 'பட்டிணமான 'ஹர்வரே' (Havere)- யிலிருந்து கப்பல் மூலமாக அமெரிக்காவில் 'நியூயார்க்' வந்தடைந்தார்கள். நியூயார்க் பிரபல பத்திரிக்கையின் 'சன்' (Sun)னிலிருந்து ஒரு. நிறுவனர், அம்மையார் தங்கிருந்த 'மார்தா வாஷிங்டன்' (Hotel Martha Washinton) ஹோட்டலுக்கே பேட்டி எடுக்க வந்தவிட்டார். காமா அம்மையார் தன் பேட்டியில் 'நான் உங்கள் அமெரிக்கா வந்திருப்பது, பிரிட்டிஷ் அரசு எங்களை (இந்தியர்களை) அடிமைப்படுத்தி எவ்வாறெல்லாம் கொடுமைப் 'படுத்துகிறார்கள், என்பதெல்லாம் உங்களைப் போன்ற தூர தேச நாட்டினவர்களுக்கு ஒரு சிறிதுதான் தெரிந்திருக்கும். எனவே எங்கள் இன்னல்களுக்கு உதவ உங்களுக்கு எடுத்துக்கூறி உங்கள் அன்பான ஆதரவை தேடியே இங்கு வந்திருக்கிறேன்.*

*இந்த இங்கிலிஸ்காரர்கள். எங்கள் நாட்டிலிருந்து ஒவ்வொரு மாதமும் '50 லட்சம்' பௌண்டை (Five million Pounds) சுரண்டி எடுத்துச் செல்லுகிறார்கள். இதற்கான எந்த பலனும், எங்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் நாங்கள், வறுமையிலும், வேறு பல*

*காரணங்காளலும், ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் மடிந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் உங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வரும் கொடைகளால் ஓரளவு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது. எங்கள் மக்களுக்கு சரியான கல்வியளித்து, எங்கள் கலாசாரத்தில் அவர்களை சரிவர வழிநடத்த எங்களுக்கு மேலும் பொருளாதார உதவி வேண்டும்.*

*மேலும் அந்த நிருபர், அம்மையார் குறிப்பிட்ட 'புரட்சியைப்பற்றிய விவரத்தை கேட்க, காமா அம்மையார் எங்களுக்கு வேண்டுவது எங்கள் மொழியில் 'ஸ்வராஜ்' அதாவது எங்களை நாங்களே ஆண்டு, விடுதலை, (Liberty) எல்லோரும் சமம் (equality), உறவு (Fraternity) முறை, என்ற நல்ல நோக்கங்களை மக்களுக்கு போதிப்பதேயாகும். எங்கள் சுயராஜ் ஜியத்தை 10 வருடங்களில் அடைவதே எங்களுடைய கனவாகும் என்றுதன் சொற்பொழிவு முழுவதிலும் இந்த கனவை அவ்வெப்போது தெளிவாக நிருபருக்கு எடுத்துக்கூறினார்.*

*எனக்கு தெரிந்து, மற்ற நாட்டினர். (இங்கு வாழும் அமெரிக்கர்கள் உட்பட) நாங்கள் இந்தியாவில் எவ்வாறெல்லாம் தண்டிக்கப் படுகிறோம் என்பதை முழுமையாக அறியமாட்டார்கள். இப்போது என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என்னால் இந்தியா திரும்ப இயலாது அப்படியே சென்றாலும் நான் ஒரு பெண் என்று கூட பார்க்காமல், மூர்கத்தனமாக தண்டிக்கப்படுவேன். அண்மையில் இரண்டு மேல்மட்ட நண்பர்கள், எங்கள் நாட்டில் இப்போது நிலவும் பற்றிய உண்மையை பேசியதால், கைது செய்யப்பட்டு எந்தவித விசாரனையும் இல்லாமல், பர்மா சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்கள். ஆனால் நீங்கள் ஒன்றுமில்லாத சைபீரியா நாட்டைப் பற்றியும், அவர்களின் சாதாரண அநீதிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள் (அந்த அம்மையார், மேலே குறிப்பிட்டுள்ள முக்கிய நபர்கள். வேறுயாரு மில்லை, பாலகங்காதர திலகரும், லாலா லஜபதிராயேயாகும்).*

*"எனக்கு இப்பொழு தெல்லாம், இந்திய மக்களைப்பற்றி செய்தித் தாளில், படிக்கும்போது, அடிமைத்தனத்தை விட்டு விலக வேண்டும் என்ற*

*எண்ணம், கல்வியறிவு இல்லாதவர்கள் மனதிலும் தீக்கனல் போல், எழுந்திருக்கிறது என்று எண்ண தோன்றுகிறது. இந்தநிலை நீடித்தால் சில வருடங்களில் லட்சத்துக்கு மேலான சுதந்திர தியாகிகள் இந்தியாவில் உருவாகிவிடுவார்கள்." எவ்வாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை தூக்கி எறிந்துவிட்டு அடிமைத்தனத்திலிருந்து வெளிவருவீர்கள்? என்று மற்றொரு நிருபர் கேட்க, 'நாங்கள் ஆங்கில அரசுக்கு, ஒருவித சாந்த எதிர்ப்பையே காட்டி வருகிறோம். நாங்கள் அமைதியை விரும்புபவர்கள். அதோடு எங்களிடம் ஆயுத பலமில்லை. நாங்கள் நினைத்தாலும் ஆங்கிலேயர் மீது போர் தொடுக்க இயலாது. நாங்கள் எங்கள் ஒற்றுமையை நம்பித்தான் பல காரியங்களை ஆற்றிவருகிறோம்.*

*மேலும், இந்த அமெரிக்க மக்கள், என்னை அமெரிக்கர்கள் எல்லோரிடம் என்னை அறிமுகப்படுத்தும் விதமாக வரும் நவம்பர் மாதம் 'வரவேற்பு' ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்கள். அதில் யாரும் என்னை இந்தியாவிலிருந்து வந்துள்ள ஒரு 'இளவரசி' என்று அறிமுகப்படுத்தி விடாதீர்கள். நான் இந்திய மக்களின் சேவகியாக இங்கு வந்துள்ளேன் என்று கூறி அங்கு கூடியிருந்த எல்லோருடய கவனத்தையும் ஈர்த்தார்.*

*இருந்தாலும் அமெரிக்க பத்திரிக்கை ஒன்றில் காமா அம்மையார் , இந்தியாவின் ஜோன்ஆப் ஆர்க் (Joan of Arc) என்று பாராட்டி எழுதியதோடு, அவர் எப்போதும் புகழை விரும்பாதவர், மேலும் அவர் எப்போது இந்திய புரட்சியைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பார் என்று அவரை பாராட்டியுள்ளது.*

*இவர் அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகர் செல்லும் முன்னே அங்குள்ள ஒரு பத்திரிக்கை இவர் புகைப்படத்தை வெளியிட்டு அவரை வரவேற்றுள்ளது. அவர் அங்கு சென்று பல கூட்டங்களில் கலந்துகொள்ள அந்தப் பத்திரிக்கை முதல் பக்கத்தில், காமா அம்மையார் படங்களை வெளிட்டு அவரைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் பிரசுரித்திருந்தது. (தொடரும்)*

# சிவபதம் அடைந்தார்



## தியாகி தெ.வே.பகவதி பெருமாள் வயது (83)

முன்னாள் பத்திரிகை நிருபர்
முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர், தெரிசனங்கோப்பு
மாநில துணைத் தலைவர், பாரதீய வெள்ளாளர் ஐக்கிய சங்கம்
ஒருங்கிணைப்பாளர், நாஞ்சில் மலர் மாத இதழ்.

திரு பகவதி பெருமாள் அவர்கள் 15-08-2020 சனிக்கிழமை யன்று தெரிசனங்கோப்பு அவரது இல்லத்தில் வைத்து காலமானார்.

அன்னார் பிரிவால் வருந்தும்
மனைவி பாக்கியம்
மகன்: B.வேலு பிள்ளை, மருமகள்: K.V.கவிதா,
பேத்தி: K.V.சரண்யா
பேரன்கள்: M.R.நீலேஷ், V.K.பரத்வேல்
ஆகியோருக்கு நாஞ்சில் மலர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# சிவபதம் அடைந்தார்



## திரு S.சுப்பிரமணி ( வயது 81 )

(முன்னாள் இராணுவ வீரர்)

**சென்னை, கன்னியாகுமரி வெள்ளாளர் சங்கப் பொதுச்செயலாளர்**
திரு சுந்தர் சுப்பிரமணியம் அவர்களது தந்தை,
மருங்கூர் திரு ,S.சுப்பிரமணி அவர்கள் 13-08-2020
அன்று காலை 11.30 மணியளவில் சிவபதம் அடைந்தார்கள்.
அன்னார் பிரிவால் வருந்தும்

| மகன்/ மகள் | மருமகள் / மருமகன் |
| --- | --- |
| சுந்தர்சுப்பிரமணியம் | திலகவதி சுந்தர். |
| S.சிவகுமார் | சுபாஷிணி சிவகுமார் |
| S.மீனா | K.சுப்பையா |

மற்றும் பேரன் பேத்திகள், உற்றார், உறவினர் ஆகியோருக்கு
**நாஞ்சில் மலர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.**

Registered News Paper RNI No. TNTAM / 2010/35566,,
Postal Registration No .TN/TBM/139/ 2020-22, WPP No. TN/ PMG (CCR) WPP - 347/ 2020-22
Posted at Egmore RMS Patrika Channel on 16 th September 2020
Date of Publication: 14 th of Every month




If not delivered Please returned to No.10, Arul Nagar, 2nd Street, Madhavaram Milk Colony, Chennai-600051

Owned and Published by K.Thanappa Pillai, No.10, Arul Nagar 2nd Street, Madhavaram Milk Colony, Chennai 600051 and Printed by B. ELANGO at BEST OFFSET PRINT at No.19A ( New No.75) Tass Industrial Estate, T.I.Miller Backside, Ambattur, Chennai -600 098 , Editor:K.KANNAN